J. V. Subrahmanya Aiyar
Bel

CONTENTS.

	Page.
Beverages of the World, The.	190
Child's Corner 20, 63,	192
Directions for Bathing	61
Female Education in Mysore.	59
Food—its Nature and Usefulness.	107
From Cabul to Candahar—a Brilliant March in Military History	150
Generosity	1
Hints for Mothers..............	44
How to Find out One's Age..	130
Maldive Islands, The...........	8
Mercy—a Story, On........50,	93
News....................26, 72,	197
Picture of the Living in the Company of the Dead on the Banks of the Ganges, A....	156
Private and Public Libraries.	38
Protective Instinct of Birds, The	173
Queen's Reign and Jubilee, The (With Illustrations)	131
Story of Nagananda, The. 11, 27,	73
Tamil Language and Tamil Poets	87
Truth's Triumph. Part I	111
Truth's Triumph. Part II	163
Two Gems	62
Varieties....................	17

2532

பொருளட்டவணை.

விஷயம்	பக்கம்
அருளுடைமை—ஒரு கதை	50, 93
அடைக்கலம் புகுந்தவர்களை ஆதரிக்கும் அறிவுள்ள பறவைகள்	173
இரண்டு ரத்தினங்கள்	62
உதாரகுணம்	1
உணவு—அதன் தன்மையும் உபயோகமும்	107
உலகத்தில் வழங்கும் பானவகைகள்	190
ஒருவன் வயதுகண்டறியும் விதம்	130
கபிலபுரத்திலிருந்து காந்தாரபுரிக்குப் படையெடுத்துச்சென்ற பிரதாபம்	150
சக்கரவர்த்தினியாரின் ஐம்பதுவருஷத்து அரசாட்சி (படங்களுடன்)	131
சமாசாரம்	26, 72, 197
சிறுவர்க்கான கதை	20, 63, 192
தமிழ்ப்பாஷையும் தமிழ்ப்புலவர்களும்	87
தருமமேதைகாக்கும் (1-பாகம்.)	111
தருமமேதைகாக்கும் (2-பாகம்.)	163
தாய்மார் தம்மக்களைப் பயிற்றுமுறை	44
நாகாநந்த நாடகக் கதை	11, 27, 73
நாநாவிஷயக் குறிப்புகள்	17
பாரதப்போரில் இறந்தவர்களைக் கங்கைக்கரையில் அழைப்பித்துக் காட்டிய அற்புதம்	156
புஸ்தகசாலைகள்	38
மலயத்திவு	8
மைசூரில் நடந்தேறிவரும் பெண் கல்வி	59
ஸ்நானஞ்செய்யும் முறை	61

ஜநவிநோதிநி.

இல. 1.] ஜனுவரிமீ 1886. [புஸ்த. XVII.

உதாரகுணமே உத்தமமானது.

கடவுளால் படைக்கப்பட்ட இப்பூமண்டலத்திலே முற்காலத்து இருந்தவர்களும் இப்போதிருக்கின்றவர்களுமான மானிடர்கள் கோடீசுவரன் தொடங்கிக் கோவணாண்டிவரையிலுமுள்ள சகலமானபேர்களும் நல்லோர் தீயோர் என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இப்பிரிவு அவரவர்கொண்டிருக்கும் குணத்தின் வேறுபாட்டால் உண்டானதேயன்றி வேறன்று. நற்குணமுள்ளவர்கள் நல்லோரெனவும் தீக்குணமுள்ளவர்கள் தீயோரெனவும் வழங்கப்படுகின்றனர். அவற்றுள் நல்லோராவதற்கு வேண்டிய நற்குணங்கள் நானாவிதமாயிருப்பினும் அவைகளில் முதன்மையானதென்று அனுபவத்தில் தேர்ந்து சிறப்புற்றோங்கிய சான்றோரனைவராலும் புகழ்ந்துகூறப்பெற்றது உதாரகுணமேயாம். உதாரகுணமாவது 'ஐயமிட்டுண்' 'தானமதுவிரும்பு' எனக் கூறியிருக்கின்றபடி, இல்லாதவர்களுக்குத் தம்மாலியன்றவளவு ஈந்து உபகரிக்கவேண்டுமென்கிற உட்கருத்துடைமையாம். இவன் 'ஈவிரக்கமுடையவன்' என்கிற உலகவழக்கினாலும் எல்லாக் குணங்களினும் ஈவே உத்தமமான குணமென விளங்குகின்றது. இக்கருத்தைநோக்கியே,

"சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி"

என இப்பூமியில் ஈகைக்குணமுடையோரே உயர்ந்தோர்; அக்குணமில்லாதவர் இழிந்தோர் என்றும் கூறியிருக்கின்றனர்.

இன்சொல், தாழ்நடை, உண்மை, ஊக்கம், ஆண்மை, கல்விமுதலாக நற்குணங்கள் பலவாயிருக்க, அவை அனைத்தினும் ஈகைக்கு வந்த ஏற்றம் யாதென்பீர்களோ, இது வெகுவாய்ப் பலர்க்கும் தெரிந்த விஷயமே. நாம் பிறக்கும்போதே இறப்பும் கூடப் பிறந்ததன்

ளுே? அதற்கு நம்முடல் இரையாகிவிட்டபின்பு நாம் யாது செய்யக்கூடும்? எவ்வளவு பெருமைபெற்று வாழ்ந்தோமாயினும் நமது பேர் ஊர் எல்லாம் அப்பொழுதே அழிந்துபோனவைதாமே. ஆதலின், கடவுள் கருணைகூர்ந்தருளிய இம்மானிடதேகம் அவ்வாறு இறப்பென்னும் பகைவனால் அழிக்கப்படுவதற்கு முன்னமே, இம்மை மறுமை யிரண்டிடத்தும் நாம் என்றும் அழியாவுடம்புபெற்று வாழ்ந்திருப்பதற்கேற்ற வழி தேடிக்கொள்ளவேண்டுவது அவசியம். தத்துவஞானம் முதலியவற்றால் மறுமையில் சுகித்து வாழ்வதற்கு ஏற்றவழி ஒருவாறு தேடிக்கொள்ளக்கூடுமாயினும், இம்மையிலே என்றும் அழியாததாகிய புகழுடம்பு பெற்று வாழ்வதற்கு உதாரகுணமொன்றுதவிர மற்றெதுவும் அத்துணை சாதனமாகமாட்டாது. இந்தக் குணமொன்று உண்டாயின் தேவலோகத்தவர்களும் நல்லறிவினும் இதனையே மேலானதாகக்கொள்வார்கள்.

"நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு."

அன்றியும் ஈகைக்குணம் ஒருவன் உயிரோடிருக்கையிலும் அவனுக்கு அளவில்லாத பெருமைகளை விளைவிக்கவல்லது. "இரப்போர்க் கீதலி னெய்துஞ்சிறப்பில்லை." ஆனதுபற்றியே இந்த நற்குணமானது ஒப்புயர்வில்லாத உத்தமகுணமென்று அனைவராலும் கொண்டாடப்படுகின்றது.

நாம் நெடுநாள் பாடுபட்டுத் தேடிய பணத்தைச் சோம்பேறிகளான வறியர்களுக்குக் கொடுத்துவிட்டால் கடைசியில் நாமும் அவர்களைப்போலவே அல்லாடும்படி நேர்ந்துபோமே; ஆதலின் ஒருவர்க்கொருவர் கொடுத்து உதவுவதென்பது உசிதமானதன்று; நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பதுபோல அவர்களும் சம்பாதித்துக்கொள்ளட்டுமே. அன்றியும் நாம் கொடுப்பதென்று ஆரம்பித்தால் அதனையே தமக்கு முக்கியஜீவனமாகக்கொண்டு அநேகர் ஊக்கமது கைவிட்டு நாளளவிலே முற்றும் சோம்பேறியாவார்கள் என்றுசொல்லிச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். இங்கே நாம் உதாரகுணமென்று சொல்லவந்தது அத்தன்மையான எளியகொடைகளையன்று; வித்தியாபிவிருத்திமுதலிய லோகோபகாரமான பல விஷயங்களில் செய்யும்தானங்களையேயாம். குடிக்கக் கூழுமில்லாமல் அழிந்துபோகின்ற குடும்பங்களைப் பொருள்கொடுத்து உதவிக் கைதூக்கிவிடலாம்; தொழில்துறைகள் கற்பித்துக் கொடுக்கலாம்; இத்தேசத்தில் அருமையாயிருக்கிற பல நூல்களும் சாஸ்திரங்களும் அழிந்துபோகின்றனவே; அவைகளெல்லாம் தலையெடுக்கும்படி செய்யலாம். இவ்வகையான நன்கொடைகளைப் பெற்று ஒருவரும் சோம்பேறியாகார்கள். கொடுத்தால்பொருள்குறைந்துபோமே என்றாலோ; அதுவுமில்லை. அது வரும்போது யாரைக்கேட்டு வந்தது? அவனவனது பாக்கியவிசேஷத்தினால் வருவதேயன்றி வேறன்று. அப்படி

யல்லாவிடின் பிறந்தநாள்முதல் ஒரே தன்மையான நிலைமையில் இரண்டுபேர் இருக்க, அவர்களில் ஒருவன் திடீரென்று தனிகனுகவும், மற்றொருவன் தனது பழைமையான வறுமையிலேயே வீருத்தமுற்றிருக்கவும் பல நிதர்சனங்கள் கண்ணாரக் கண்டிருக்கிறோமே; இவைகளுக்கெல்லாம் என்னவழி. அவ்வாறே ஆகட்டும்; நமக்கு வேண்டும்போது பொருள் அகப்படுமோ? அகப்படாதே; அதற்காக அதிர்ஷ்டவசத்தால் கிடைத்தபொருளைப் பத்திரமாய்க் காப்பாற்றி வைத்துக்கொள்வோம் என்றாலோ, அப்படிக் காப்பாற்றிவைக்கப்பட்ட பொருள் நிலைக்காது என்பது தோன்ற 'ஈயார் தேட்டைத் தியார் கொள்ளுவர்' எனவும், உள்ளவரையில் தானும் சவுக்கியமாய் உண்டு உடுத்துத் தன்னைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் தன் பொருளால் சுகித்திருக்கக் கண்ணாரக்கண்டு களிப்பதேதான் கண்டதென்பது தோன்ற 'செல்வர்க்கழகு செழுங்கிளைதாங்குதல்' எனவும், 'கூடுவிட்டிங் காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார் பாவிகாள் அந்தப்பணம்' எனவும் கூறியிருக்கின்றார். இதுவரையில் இப்பூமியிலே பிறந்து இறந்தவர்கள் எத்தனைபேர்! அவர்களுள் யாரோ சில மகான்களுடைய பெயர்தவிர மற்றப் பல்லாயிரம் பிரஜைகளுடைய பெயர் எவனுக்காவது தெரியுமா? இவ்விந்துதேசத்தில் அப்படிப்பட்டமகான்களுள் முதன்மையாக விளங்கினவன் கர்ணன். 'கர்ணனுக்குப்பின் கொடையுமில்லை, கார்த்திகைக்குப்பின் மழையுமில்லை' என்று அவனுடைய உதாரகுணம் ஒரு பழமொழியாகவும் வழங்கலாயிற்று. அவனுடைய உதாரகுணங்கள் மகாபாரதத்திலே அங்கங்கே பலவிடங்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

கர்ணனுக்குப்பின் இரண்டாவனுக விளங்கிய பெருங்கொடைவள்ளல், பிற்காலத்து தாராநகரத்தில் அரசுபுரிந்துவந்த மகாப்பிரபுவாகிய போஜராஜன். இம்மகாராஜன் தனது உதாரகுணத்தினுல் காமதேனு கற்பகத்தரு சிந்தாமணிமுதலியவற்றின் மகிமையையும் அற்பமாக்கி உலகமெங்கும் பரந்தோங்கிய புகழையுடையவன். அவனுடைய சரித்திரத்தில் கூறிய பல புதுமைகளுள் இரண்டொரு விஷயம் இங்கே இதற்கு ஓர் நல்ல நிதர்சனமாகுமென்று அவற்றை இதனடியில் ஒருவாறு சுருக்கி எழுதுகின்றோம்.

போஜராஜன் அரசு செலுத்திவருநாளில், அவன் வித்வான்களிடத்திலும் கவிகளிடத்திலும் மிகுந்த அபிமானமுடையவனுய்த் தன் சபைக்குக் கவிபாடிக்கொண்டுவருகிற ஒவ்வொருவருக்கும் அவரவருடைய யோக்கியதைக்குத் தக்கவாறு யானை குதிரைமுதலியவைகளும் பொருள்களும் பூணாரங்களும் பரிசு அளித்துவரத் தொடங்கினன். அதனுல் நாளுக்குநாள் பொக்கிஷத்தில் பணம் வெகுவாகக் குறைவுபட்டுக்கொண்டே வந்தது. அதுகண்டு மந்திரியானவன் ஒருநாள் அரசனைநோக்கி, நீர் இப்படி பணத்தை அளவுசங்கியை இல்லாமல் செலவுசெய்துவிடலாமா? கைப்பொருள் மிகுந்

திருந்தாலல்லவோ அரசருக்குப் பெருமை! சேனாபலம், ராஜ்யபலம், கோசபலம், துர்க்கபலம், இவைமுதலியன எவனுக்கு அதிகமாய் இருக்கின்றனவோ அவனே பகைவர்களால் வெல்லக்கூடாத ஜய சீலனான அரசனாவான் என ராஜநீதிநூல்கள் முறையிடுகின்றன.

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு."

அன்றியும் உலகத்தில் வறியனாய்ப்போனவனுக்குப் பொருளின்மேல் ஆசை அத்தனை அதிகம் கிடையாது; தனவான்களுக்கே மேன்மேலும் பொருளாசை அதிகமாகும். இரண்டு *கோடியுடன் கூடியவில்லானது †லக்ஷத்தின்மேலே கண்வைத்திருப்பது யாவரும் அறிவோமே. பொருளாசையற்றால் அரசர்களுக்கு அபிவிர்த்தியுண்டாகாது; 'வேந்தர் தனமே விரும்புவார்' என நீதிநூல் முறையிடுகின்றது என்றுகூற, அதுகேட்டு ராஜா, நீர் சொல்வது சரியன்று; செல்வமிருந்தால் அதற்குத்தக்க தானதருமம் முதலாகிய செலவும் கூடவே இருத்தல்வேண்டும். இல்லாவிடின் அச்செல்வம் உடனே அவனைவிட்டு நீங்கிவிடும் என்றுசொல்லி, அவ்வமைச்சனை அந்த அதிகாரத்தினின்றும் நீக்கி அதற்குப்பிரதி மற்றொருவனை நியமித்து, அவனுக்குக் கண்டிதமான கட்டளையொன்றும் செய்தான். அதாவது, இந்த ராஜாங்கத்து அதிகாரிகளுள் எவனாயினும் சரி, கொடுப்பதைக்கண்டு பொறாமைப்படுவானாயின் அவனை உடனே நிவர்த்திசெய்துவிடவேண்டும். பிறர்க்கும் தமது கையால் கொடுத்துத் தாமும் எவ்வளவு அனுபவிக்கிறார்களோ, அவ்வளவுதான் அவர்களுக்குச் சொந்தமான பொருள். நாம் இறந்துபோனபிறகு அந்நியர் நமது பொருளையெடுத்து அனுபவித்துக்கொண்டு கோலாகலமாயிருந்தால் அது நமக்கு என்ன சுகமாயிற்று, ஒன்றுமில்லை. அன்றியும் கொடுப்பவனை உலகத்தார் கொண்டாடுவார்களேயன்றிப் பணக்காரனைக் கொண்டாடார்கள். எல்லோரும் மேகத்தை விரும்புகிறார்களோ, கடலை விரும்புகிறார்களோ? மேலும் நீரைத் தன்னிடம் சேர்த்துவைத்திருக்கின்ற கடல் கீழேயே இருந்துகொண்டிருக்க, பெருங்கொடைவள்ளலாகிய மேகம் பூமியின்மேல் எவ்வளவு உயரத்தில் கம்பீரமாகக்கர்ச்சித்துக் கொண்டிருக்கின்றது பார் என்றான்.

அன்றுமுதல் ராஜாவினுடைய உதாரகுணம் இன்னும் அதிகமாக விருத்தியடைந்துவந்தது. இப்படியிருக்க ஒருசமயத்தில் அந்த மந்திரி, இதேது; கரைகடந்துபோகின்றதே என்று ஆலோசித்து, ராஜாவின் எதிரே யாதொன்றும் மறுத்துப்பேசத் துணியாமல், அவன்

* கோடி—வில்லுக்கானபோது நுனி; தனவானுக்கானபோது நூறுலக்ஷம் என்னும் அளவு.

† லக்ஷம்—வில்லுக்கானபோது இலக்கு; தனவானுக்கானபோது நூறாயிரமென்னும் அளவு.

பள்ளியறைச் சுவரிலே 'ஆபத்து நேர்ந்தவிடத்து உதவியாகும்படி பொருளைக் காப்பாற்றிவைக்கவேண்டும்' என்னும் கருத்துள்ள ஒரு அடியை எழுதிப்போயினன். மறுநாள் போஜராஜன் நித்திரைதெளிந்து எழுந்திருக்கும்பொழுது சுவரில் எழுதியிருப்பதைக்கண்டு அது தனக்காகவே எழுதினதெனத் தெரிந்து, 'திருமகள் கடாக்ஷம்பெற்றவர்களுக்கு ஆபத்து ஏது?' எனப் பொருள்கொண்ட இரண்டாவது அடியை அதன்கீழ் எழுதிவைத்தான். பிறகு மந்திரிவந்து அங்கு எழுதிவைத்திருப்பதைக் கண்டு 'அத்திருமகள் கடாக்ஷம்போய்விட்டாலோ' என்னும் அர்த்தமுள்ள மூன்றாவது அடியை வரைந்தான். மற்றுநாள் அரசன் படுக்கவரும்போது அதைப்பார்த்து அதன்கீழ், 'தேடிவைத்த பொருளும் அதனோடுகூடவே போய்விடுகின்றது' என்றதாக நான்காவது பாதத்தை யெழுதிமுடித்தான். மறுநாள் மந்திரி வந்துபார்த்து ராஜாவின் மனவுறுதியைக்கண்டு மிகவும் மகிழ்ச்சிகொண்டு அவன் கால்களில்வீழ்ந்து தான் தெரியாமையால் செய்தபிழையைப் பொறுத்துக்கொள்ளவேண்டுமென வேண்டிக்கொண்டான். அந்த சுலோகமாவது,

"ஆபதர்த்தம் தநம் ரக்ஷேத் ஸ்ரீமதாமாபத: குத: ।
ஸாசேதபகதா லக்ஷ்மீ: ஸஞ்சிதார்த்தோ விநச்யதி॥" என்பதாம்.

"மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாம்—திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்"

எனவும் கூறியிருக்கின்றனர். போஜராஜனுடைய சரித்திரத்தில் இத்தன்மையான உதாரகுணத்தைப்பற்றிய கிளைக்கதைகள் இன்னும் அநேகமிருக்கின்றன. அவைகளை இங்கு எடுத்துரைத்தால் பெருகுமென்று இவ்வளவோடு முடித்தோம்.

இத்தன்மையான தருமப்பிரபுக்கள் பூர்வகாலத்திலேதான் இருந்தார்களென்பதில்லை; இக்காலத்திலும் அநேகர் இருந்திருக்கிறார்கள். இத்தேசத்தில் சிலகாலமாக மிகச் சிறப்புற்றதாகிய புகழுடம்புபெற்றுவாழ்கின்ற காஞ்சீபுரம் பச்சையப்பமுதலியார் அவர்கள் ஒருவரே இதற்கு ஒரு ஒப்பற்ற உதாரணமாகின்றார். வடவேங்கடம் தென்குமரியென்னப்பட்ட இவ்வெல்லைகளுக்குள்ளடங்கிய இத்தமிழ்நாட்டினுள் மேற்படி முதலியாருடைய தருமம் நடந்தேறாத திவ்வியதேசத்தைக் காண்பரிது. அவருடைய தருமங்களுக்கு இச்சென்னைமாநகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்ற தரும வித்தியாசாலையே மத்தியஸ்தானம் என்பது வெகுவாய் அநேகர்க்கும் தெரிந்தவிஷயமே அன்றோ? ஆதலின் இக்காலத்து அந்தப் புண்ணியபுருஷருடைய புகழ் குன்றின்மேலிட்ட விளக்குப்போல இப்பூமண்டலம்முழுதும் வியாபித்து ஐரோப்பியர்முதலிய பலராலும் மேலாகக் கொண்டாடப்பட்டுவருகின்றது. ஆயினும் இந்தப் பெரிய

தருமம் அதைப் பரிபாலித்துவருகின்ற தருமபரிபாலன ஸபையாருடைய விசாரணை சிர்பெற்றிராவிடின் நன்கு நடத்தப்படாதாகையால், அந்தப் பிரபுக்களுடைய தருமசிந்தையையே நாம் மேலாகக் கொண்டாடவேண்டும். ஆனாலும் இவ்வளவு விபவமாகத் தேசமெங்கும் நடந்தேறிவருகின்ற தமது தருமங்களைப் பச்சையப்பமுதலியார் நேரிலிருந்து கண்ணாரக்கண்டு களிப்படையக் கொடுத்துவையாமற் போனாரென்பதுமாத்திரம் பெருங்குறையேயாம்.

இவ்வாறே கோவிந்தப்பநாயுடு, செங்கல்வராயநாயகர் முதலிய இன்னும் அநேக பிரபுக்கள் இத்தேசத்தில் பல தருமங்கள் செய்து புகழ்படைத்திருக்கிறார்கள். ஐரோப்பா கண்டத்தார் முதலியவர்களிலோ இத்தன்மையானவர்கள் அநேகர் உண்டு. அவர்களுடைய தருமங்களையெல்லாம் எடுத்துரைக்கப்புகுந்தால் பல புத்தகங்கள் எழுதினாலும் போதாது.

இவைகளன்றியும் இப்படிப்பட்ட மகாபுருஷர்கள் தமக்கு ஒரு சமயத்தில் சொற்பஉபகாரம் செய்தவர்களுக்கு அளவற்ற ஐசுவரியங்களைக் கொடுத்துக் காப்பாற்றியிருக்கின்றார்கள். இதற்கும் முற்கூறிய போஜராஜனையே ஒரு நல்ல நிதர்சனமாகக் கொள்ளலாம். ஒருநாள் போஜமகாராஜன் வேட்டையாட மனமுற்று அரணியத்திற்குப் போய் வெகுநேரம் வேட்டையாடிக் களைத்துத் திரும்பி வீடுநோக்கி வருகையில், வழியில் ஓரிடைப்பெண் தாராநகரத்தில் விற்பதற்குத் தயிர்க்கூடையைத் தலையில் வைத்துக்கொண்டுபோவதைப் பார்த்தான். பார்த்து அரசன் அவ்விடைப்பெண்ணின் அருகேசென்று, ஓ பெண்ணே, நான் இவ்வனத்தில் வேட்டையாடி மிகவும் களைத்துவருகிறேன்; நீ என்னுடைய களைதீரும்படி எனக்குக் கொஞ்சம்மோர் கொடுப்பாயா என்று கேட்டான். அதற்கு அப்பெண் அப்படியே ஆகட்டுமென்று அதிகசந்தோஷத்துடனே தலைமேலிருந்த கூடையைக் கீழே இறக்கி, தமக்குவேண்டியவளவு தயிர்குடித்துக் களைதீரலாமென்று சொல்ல, போஜராஜனும் அப்படியே தனக்கிஷ்டமானமட்டில் தயிர் குடித்துத் தன் தாகத்தைத் தணித்துக்கொண்டான். பிறகு சந்தோஷமாய் அவன் இடைப்பெண்ணைப் பார்த்து, உனக்கென்ன வேண்டும் கேள், கொடுக்கிறேனென்று சொல்ல, அதற்கு அச்சிறுமி, ஓ மகாப்பிரபுவே, நான் இன்னும் கன்னிகழியாத சிறுமகள்; உம்மை மணம்புரிந்து உமக்குப் பத்தினியாகவேண்டுமென என் மனம் ஆசைகொள்ளுகின்றது என்று சொன்னாள். அதுகேட்டு ராஜா தாழ்ந்த ஜாதியான இடைச்சியென்று அலக்ஷியம் செய்யாமல் அப்பெண்ணின் சாதுரியத்தைக் கண்டு வியந்து, அப்படியே ஆகட்டுமென்று கூடவே அப்பெண்ணையும் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போய் விவாகஞ்செய்துகொண்டு வெகு மேன்மையாகப் பரிபாலித்துவந்தான். இவ்வாறன்றிக் கேவலம் பொருள்கொடுத்து உதவியவர்களும் பலர் இருக்கிறார்கள்.

இதற்கு இத்தேசத்திலேமாத்திரமன்றி இங்கிலாந்துமுதலிய தேசங்களிலும் பற்பல திருஷ்டாந்தங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றைமாத்திரம் இங்கே சுருக்கமாய்க் குறிப்பிக்கின்றோம்.

முன்னொருகாலத்தில் ஒரு மகாப்பிரபு லந்தன் மாநகரத்தில் அரசாட்சி செலுத்திவந்தான். ஒருநாள் அந்தப்பிரபு வேட்டையாடுவதற்கு வனத்திற்குச்சென்று வெகுதூரம் திரிந்து வேட்டையாடிக் களைத்து, வெகுவேகமாய்த் திரும்பிவந்துகொண்டிருந்தான். வருகையில், ஓரிடத்தில் மிக்க வடிவழகுள்ளவளான ஓர் பெண்மணி ஒரு கிணற்றில் நீர்சேந்திக்கொண்டிருந்தாள்; அப்பெண்ணைப் பார்த்து அந்தப் பிரபு அவ்விடத்திற்குப்போய், ஓ பெண்மணியே! தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர்கொடுப்பாயா என்று கேட்க, அப்பெண் அவன் முகத்தைத் திரும்பிப்பார்த்து மிகக் களைத்திருக்கிறானெனத் தெரிந்து கொஞ்சம் நீர்கொடுத்தாள். அதைக்குடித்து அவன் தன் தாகத்தைத் தணித்துக்கொண்டு, அப்பெண்ணின் முகத்தைப்பார்த்து, இப்பெண்ணரசு ஒரு ஏழைவீட்டில் பிறந்ததென்று தோன்றுகிறது; இவ்வளவு ரூபலாவணியமுள்ள கன்னிகை இம்மாதிரி கடினமான முரட்டுவேலைகள் செய்யத் தகுந்தவளல்லள்; அளவற்ற பாவஞ்செய்து ஏழைவீட்டில் பிறந்தாள். நம்முடன் வருவாளேயாகில் நமது பட்டணத்தில் இப்பெண்ணுக்குத் தகுந்த ஒரு நாகரிகமான வேலை தேடிக் கொடுக்கலாமென்று தனக்குள்தானே ஆலோசித்துக்கொண்டு, அப்பெண்மணியை யழைத்து, ஓ பெண்கள் நாயகமே! நீ என்னுடன் வருவாயாகில் சுகமாக ஜீவனஞ்செய்யும் வழி ஒன்று உனக்குக் காட்டுகிறேனென்று சொன்னான். அப்பெண் அந்தப்பிரபு தன்மேல் பிரீதியுடன் சொன்ன வார்த்தையைக் கேட்டு வெகு சந்தோஷத்துடன் சிரித்து அவனுக்கு வந்தனஞ்செய்து, ஓ மகாப்பிரபுவே, அன்று எழுதிய எழுத்தை ஆண்டவன் மறுபடி அழித்து எழுதுவானேன்? இந்த நியாயம் தங்களுக்குத் தெரியாததோ? அன்றியும் 'ராமேசுவரம் போனாலும் சனீசுவரன் விடாது' என்கிற பழமொழியையும் கேட்டிருக்கிறோமே. நான் எவ்விடம் போனபோதிலும் என் தலையெழுத்துத் தப்புமா? ஆகையால் இவ்விடத்துக் காரியத்தைவிட்டு நான் உங்களூருக்கு வருவது கூடாது; அல்லாமலும் என் தாய் மிகவும் தள்ளாதவளாய் எழுந்திருக்கச் சக்தியற்று வீட்டிலே படுத்திருக்கிறாள். அவளை இவ்விடத்தில்விட்டு நான் உம்முடன் வந்துவிடுவேனேயாகில், பெரும் பழிக்கு ஆளாவேன்; அன்றியும் இக்கிழவியை ஆதரிப்பவரும் ஒருவருமில்லையென்று சொன்னாள். அதற்கு அந்தப் பிரபு உன் தாயையும் நீ அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுவந்த அங்கே சுகமாயிருக்கலாம். நல்லது, உன் தாய் எங்கேயிருக்கிறாள்; போய்ப் பார்ப்போம் வாவென்றான்.

அப்படியே அந்தப் பெண் அவனைத் தாங்களிருக்கும் வீட்

டிற்கு அழைத்துக்கொண்டுபோயினாள். அவ்விடத்தில் அரையில் கட்டிக்கொள்ளக் கந்தைகூட இல்லாமல் படுத்திருந்த கிழவியை அவ்வரசன்கண்டு, ஐயோ பாவம், இப்படிப்பட்ட எளியகுடும்பத்தை நான் எங்கும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை; அதனோடுகூட, உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந்ததுபோல், இக்கிழவியும் நோயும்பாயுமாய்ப் படுத்திருக்கின்றாளே. இவர்களின் கஷ்டத்தைக் கடவுளே கடாக்ஷித்துப் போக்கடிக்க வேண்டுமேயல்லது நம்மைப் போன்றவர்கள் ஒருபோதும் தீர்க்கமுடியாதென்று சொல்லிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்தக் கிழவி அரசனைநோக்கி, ஓ சுவாமி, நான் இந்தப் பெண்ணை என்மட்டில் தெய்வமென்றே சொல்லவேண்டும். இவள் செய்துவருகின்ற உபசாரத்தினாலே தான் நான் இவ்வளவோடாவது இருக்கின்றேன். இல்லாவிட்டால் நான் இத்தனைநாள் என்ன கதியாயிருப்பேனோ? ஆதலின் நீர் இப்பொழுது என் நிலைமையைப் பார்த்துச் சந்தோஷப்படவேண்டுமேயல்லது விசனப்படக்கூடாதென்றாள். அதுகேட்டு அந்தப் பிரபு அவர்களுடைய மனவுறுதியைக்கண்டு மிகவும் வியந்து, கிழவியின் மகளைப்பார்த்து, பெண்ணே உன் தாயை இங்கழைத்துவா என்று சொன்னான். அப்படியே அம்மகள் தன் தாயாரை அவனருகில் அழைத்துவர, அவன் தன் பையிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் எடுத்துக் கிழவியின் கையில் கொடுத்து, தாயே, உன் பெண் மிகவும் அறியாத சிறுமி; இந்தப் பணத்தை நீ பத்திரமாய் உன்னிடத்திலேயே வைத்துக்கொண்டு அன்றன்றைக்கும் செலவுக்கு வேண்டியதை உன் பெண்ணிடத்தில் கொடுத்துக் காய்கறிமுதலியவைகளை வாங்கிவரச்செய்து நீங்களிருவரும் சுகமாக ஜீவனஞ்செய்துகொண்டிருங்கள். உன்னுடைய அந்தியகாலத்தில் மிகுந்த ரூபாயை உன் மகளுக்கு ஆஸ்தியாகக் கொடுத்துவிடு என்றுசொல்லிச் சந்தோஷப்படுத்திவிட்டுப் போயினான்.

"உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வ ரதம ரவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து."

மலயத்தீவு.

மலயத்தீவென்பது இந்தியாவின் தென்மேற்குமூலையில் மலையாளக்கரையோரமாயுள்ளது. அதில் கிறிஸ்துபிறந்த முதலாவது நூற்றாண்டில் குடியேறினார்களென்றாலும், மூன்றாவது நூற்றாண்டின் ஆரம்பம்வரையில் ஜனங்கள் அதில் குடியேறினதைப்பற்றி அவ்வளவு திட்டமாக ஒன்றும் தெரியவில்லை. அக்காலத்தில் அவர்

கள் மகம்மதியாக்கப்பட்டு, பதினாறும் நூற்றாண்டுவரையில் மலையாள நாட்டிலுள்ள கண்ணனூர் அரசாட்சியின் கீழிருந்தார்களென்றும், பின்பு போர்த்துகல்தேசத்தார் கீழ்நாட்டுக்கு வரத்தொடங்கியதுமுதல் அவர்கள் அதிகாரத்துக்குட்பட்டிருந்தார்களென்றும், அவர்கள் இளைத்தபின்பு டச்சுக்காரர் ஆளுகைக்குட்பட்டு இலங்கைத்தீவாரின் துரைத்தனத்தின் கீழிருந்தார்களென்றும் தெரியவருகின்றது. 1796-ம் வருஷத்தில் இலங்கையின் ஆட்சி டச்சுக்காரர் கையைவிட்டு அங்கிலேயர் கையேற, அதுமுதல் அத்தீவு இடையறாது இன்றளவும் அங்கிலேயர் துரைத்தனத்தின்கீழ் நிலைபெற்றிருக்கின்றது. மலையத்வீபம் அங்கிலேயரின் அதீனத்திற்குட்பட்டது என்றாலும் அவர்கள் அத்தீவின் ஆளுகையைப்பற்றி அதிகமாய் மேற்போட்டுக்கொள்ளாமல் அத்தீவாரின் மனப்போக்கின்படியே விட்டுவிட்டிருக்கிறார்கள்.

அத்தீவார் மிகப் பயந்தவர்கள்; அவர்களுக்கு ஐரோப்பியரைக் காண்பதென்றால் வெறுப்பாயிருக்கும். அத்தீவின தலைவனான சுல்த்தான் என்பவன் இலங்கைத்தீவின் கவர்னருக்கு வருஷமொருமுறை தூதன்வழியாக ஒரு கடிதத்தையும்; பாய்களையும், பலகாரங்களையும் அத்தீவினின்று காணிக்கையாகப் பேருக்குமட்டும் அனுப்புவான். அவ்வாறே இலங்கையினின்று அதன் அங்கோரபத்திரிகையும், தாம்பூலமும், வாசனைத்திரவியங்களும் மரியாதைக்காக சுல்த்தானுக்கு அனுப்பப்படும். சுல்த்தான் கவர்னருக்கு அனுப்பும் கடிதம் முதலியவை துறைமுகமாகிய கொழும்புக்குச்சென்றதும், பழைய அரசர்காலத்திலிருந்த போர்வீரர்கள் தரித்த உடைகளைப் பூண்ட இராணுவசேவகர்கள் முன்னே பவனியாகச்செல்ல, வாத்தியகோஷத்தோடு அவற்றை எடுத்துக்கொண்டு செல்லுவார்கள். அவர்கள் அவ்வாறு செய்யும்போது இலங்கைத்தீவிலும் மலயத்வீபத்திலும் உள்ள அதிகாரிகள் ஸ்தானுதிபதிக்குமுன் வெள்ளித்தாம்பாளத்தில் கப்பத்தை வைத்துத் தங்கள் தலையில் தூக்கிக்கொண்டு செல்லுவார்கள். கப்பங்கொண்டுபோன சில நாளையில் அவர்கள் மீண்டும் தங்கள் தீவுக்குத் திரும்பி வந்துவிடுவார்கள்.

கொழும்பிலிருந்து மலயத்வீபத்திற்குச் செல்லுகையில் காலையிலும் மாலையிலும் சூரியன் கடலில் உதிப்பதையும் அஸ்தமிப்பதையும் பார்த்தால் வெகு விநோதமாயிருக்கும். போகும்பொழுது வழியில் பலவிடங்களிலே பவழப்பார்களைத் தாண்டிக்கொண்டு போகவேண்டும்.

பவழப்பார்களில் பூமியிலாவது கடலிலாவது இல்லாதவண்ணமாய்ப் பற்பல நிறம் விசித்திரமாய் அமைந்திருக்கும். அங்கே கடலின் வெண்ணுரையையும் பவழக்கொடிகள் ஜலத்திற்குள்ளே மேடு பள்ளமாய் இறங்கிப் படர்ந்திருப்பதையும் பார்க்கப்பார்க்க அழகாயிருக்கும். அன்றியும் அப்பார்களில் மோதி உடைந்துபோன

நீராவிமரக்கலங்களிலும் சிலவற்றை அங்கே பார்க்கலாம். இவ்வாறு மலயத்வீபம்போய்ச் சேர்ந்ததும் அங்குள்ள உத்தியோகஸ்தர்கள் எதிர்கொண்டு அழைக்கவருவார்கள்.

மலயத்வீபத்தார் மிகவும் நல்லவர்கள்; அவர்கள் எவரிடத்திலும் அதிகமாய் அன்புபாராட்டுவார்கள். மாலுமிகள் தங்களுடைய கப்பல்கள் அமிழ்ந்துபோய் அவ்விடம்சென்றால் அத்தீவார் அவர்களுக்கு வேண்டிய உபசாரமெல்லாம் செய்வார்கள். இவ்வாறு உபசரிப்பதற்காக இலங்கைத்துரைத்தனத்தார் அவர்களிடத்தில் நன்றிபாராட்டுவது வழக்கம். அவர்கள் உருவத்தில் குள்ளமானவர்கள். பெண்கள் அழகுடையவர்களென்றாலும் சற்றுப் பருத்த தேகமுடையவர்கள். அவர்கள் மதாபிமானமுள்ள மகம்மதியர்கள். இந்துதேசத்திலுள்ள மகம்மதியஸ்திரீகளைப்போல வெளியே வரக்கூடாதென்கிற நிர்ப்பந்தம் அவர்களுக்குள் இல்லை. அங்கே குழந்தைகள் அதிகம்; அக்குழந்தைகள் நல்ல பலமும் திடமுமுடையவைகள். அங்குள்ள பட்டணம் அழகாய் அகன்ற தெருக்களையுடையது; தேசம் மணற்பாங்கானதால் பாதரட்சையில்லாமலேதான் அங்குள்ள மணல்வெளியில் நடக்கவேண்டும். அங்கே எதைப்பார்த்தாலும் அழகாயிருக்கும். கூரைவீடுகள்தான் அதிகம். வீட்டைச்சுற்றிலுமுள்ள வேலிகள் தென்னங்கீற்றால் அழகாய்க் கட்டப்பட்டிருக்கும். அங்குள்ளவர்களுக்கு மீனும் அரிசியும் ஆமையும் உணவு. தேங்காய் ஏராளம்; வாழை மிகவரிது; எலுமிச்சம்பழமும் முலாம்பழமுமே கொஞ்சம் அகப்படும்.

மலயத்வீபத்தார் படகு ஓட்டுவதில் மிகவும் கைதேர்ந்தவர்கள். அங்குள்ள தோணிகள் கடலில் வெகு வேகமாய்ச் செல்லும். சாதாரணமான வஸ்திரங்களைமட்டுந்தான் அவர்கள் நெய்யவல்லவர்கள். அவர்கள் பற்பல நிறமான பாய்களை நெய்வதில் கைதேர்ந்தவர்கள். கதம்பைநார்க்கயிறுகள் அங்கே ஏராளம். அரிசி, பாக்கு, சர்க்கரை, பருத்திவஸ்திரங்கள் இவைதாம் அத்தேசத்தில் முக்கியமான விளைவுகள். எங்கேகண்டாலும் தென்னை செழிப்பாய் வளரும்; சிதாவும் அரசும் மூங்கிலும் சில இடங்களிலுண்டு. மாங்களெல்லாம் பெரும்பான்மையாய்ப் பிறதேசங்களிலிருந்தே அவ்விடத்துக்குக் கொண்டுபோகவேண்டும்.

அத்தீவிற்குரிய மிருகங்கள் அங்கே ஒன்றுமில்லை. சுல்த்தானிடத்தில்மட்டும் சில பசுக்கள் உண்டு. அன்றியும் இலங்கைக்கவர்னரால் அவருக்கு வெகுமதியாகக் கொடுக்கப்பட்ட ஒரு குதிரையுமுண்டு. வெள்ளாடு மிகுதி. நாயாவது பூனையாவது அங்கே கிடையாது. தேங்காய்க்குரும்பைகளைப் பாழாக்கும் மரநாய்கள்மட்டுமுண்டு. பல்லிகள் எங்கும் கூட்டங்கூட்டமாய் நெளிந்து காலடியில் மிதியலாகும். பறவைகள் அத்தனை அதிகமாயில்லை; கழுகுகள்மட்டும் சிலவுண்டு.

அங்குள்ள தீவுகளெல்லாம் அண்டவடிவாயிருக்கும்; அத்தீவுகள் தெற்குவடக்கில் ஒருவாறு நீண்டிருக்கின்றன. அவற்றைச் சுற்றிப் பவழப்பார் படிந்திருக்கும். ஒவ்வொரு தீவின்நடுவிலும் தென்னை அபரிமிதமாய் வளர்ந்திருக்கும்.

வித்துவான்கள் பவழப்பார்களைப்பற்றி வெவ்வேறுவிதமாக நினைக்கிறார்களென்றாலும், நாளுக்குநாள் ஜலத்திற்குள் மூழ்கிப்போகுந் தீவுகளின்மேல் பவழக்கொடிகள் படருகின்றனவென்பது மெய். அங்கே ஜலத்திற்குமேலுள்ள சில மேடான இடங்களில் மாமும் செடியும் முளைத்து வளர்ந்திருப்பதுமுண்டு. தென்னமரங்கள் ஜலத்திற்குமேல் கொஞ்சம் தெரிந்துகொண்டிருக்கிற பவழத்தீவுகளும் அங்கே சில உண்டென்று அத்தீவார் சொல்லுகிறார்கள்.

மலயத்வீபத்துக்குள்ளே செல்லவேண்டுமானால் அவற்றை மோதிரம்போல வட்டமாய்ச் சூழ்ந்துகொண்டிருக்கிற பவழப்பார்களைத் தாண்டியே செல்லவேண்டும்; அவ்வாறுதாண்டிச்செல்வது மிகவும் வருத்தமானது. அவ்விடங்களிலிருந்துபோகும் வழிகளில் தண்ணீர் மடைதிறந்த வெள்ளம்போல வேகமாய்ச் செல்லும். கொழும்பிலிருந்து மலயத்வீபம் ஐந்துநாள் பிரயாணமுள்ளது.

நாகாநந்தநாடகக் கதை.

இப்பூமண்டலத்திலுள்ள கண்டங்கள் பலவற்றுள்ளும் ஆதிகாலந்தொடங்கி மிக்க நாகரிகத் தேர்ச்சிபெற்றதாகி, நிலவளமும் நீர்வளமும் செறிந்து நெடுங்காலமாக நீதிநூன்முறை தவறாது அநேக சக்கரவர்த்திகளால் ஆட்சிபுரியப்பெற்று, அநாதிபாஷையான ஆரிய பாஷைக்குப் பிறப்பிடமாயிருப்பதன்றியும் பற்பல சுதேசபாஷைகளோடு இக்காலத்து எல்லாத் தேசங்களிலும் மாட்சிமைபெற்றோங்கிய மகா ராஜபாஷையாகிய அங்கிலேயபாஷைக்கும் நர்த்தனஸ்தானமாகி, பிறதேசத்தவர்கள் பலரும் பார்த்துப் போரவல்கொள்ளுமாறு பலவகைச் செல்வங்களுநிறையப்பெற்று, இந்நிலமகளுக்கு ஒப்புயர்வில்லாத ஓர் திலகமணிபோல விளங்காநின்ற இப்பாத கண்டத்தின் வடபாகத்திலே, கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத்திரி முதலிய மகா நதிகளுக்கு உற்பத்திஸ்தானமாய் ஆகாயமளாவி ஓங்கிப் பருவதராஜனெனப் பெயர்பெற்று, இனிய பல அற்புதக்காட்சிகள் அளிக்கின்ற இமாசலத்தின் உச்சியிலே வித்தியாதரர்கள் பலர் பற்பல இராஜதானிகள் அமைத்துக்கொண்டு வெகுகாலமாக வாசம் செய்துவந்தார்கள்.

அவ்வரசர்களில் ஜீமூதகேது என்பவன் ஒருவன். அவனது நகரம் ஜீமூதபுரமென்பது. அவன்முன்னோர்கள் வெகுகாலம் தவம்புரிந்து

கடவுள் அனுக்கிரகத்தால் தேவலோகத்துக் கற்பகத்தரு ஒன்று சம்பாதித்து, தமக்கு வேண்டிய பொருள்கள் பலவும் அதினிடமிருந்து பெற்றுச் சுகித்துவந்தார்கள். ஜீமூதகேதுவும் அவ்வாறே சகல சாம்பிராஜ்யங்களுநிறைந்து சிலகாலம் சுகமுற்றிருந்தானாயினும், தனது வமிசத்துக்கு வித்தான புத்திரசாம்பிராஜ்யம் ஒன்றுமாத்திரமில்லையென்று விசாரமுற்று, கடைசியில் அக்கற்பகத்தருவினது நன்கொடையினால் ஜீமூதவாகனனென்னும் ஒரு நற்புதல்வனைப் பெற்றான்.

இந்த ஜீமூதவாகனன் மிக்க கல்வித்தேர்ச்சியும் தத்துவஞானமும் சாந்தகுணமும் பூததயை பச்சாத்தாபமும் உடையவன்; தன்னுயிரைக் கொடுத்தாயினும் மன்னுயிரைக் காக்கவேண்டுமென்னும் பரோபகார சிந்தையுடையவன். அவன் ஒருகால் தன்னிடம் வந்து யாசித்த ஓர் ஏழை அந்தணனுக்குத் தன் முன்னோர்கள் தேடிவைத்த கிடைத்தற்கருமையான கற்பகத்தருவைத் தானஞ்செய்துவிட்டான். அன்றியும் அவன் தான் செய்யவேண்டிய கடமைகள் பலவற்றுள்ளும் 'தந்தைதாய்ப் பேண்' என்றபடி தாய்தந்தையர்களுக்குப் பணிவிடைசெய்து போற்றுவதையே முதன்மையான கடமையாகக் கொண்டிருந்தான்.

இவ்வாறிருக்க ஜீமூதகேதுவானவன் தனக்கு வயது தளர்ந்து மூப்புமேற்கொண்டதனால் இனிச் சொற்பகாலமாயினும் இம்மையைப் பற்றிய கவலைகளையொழித்து மறுமைக்குவேண்டிய வழி தேடிக்கொள்ளவேண்டுமென விருப்பங்கொண்டு, ஜீமூதவாகனனுக்கு ஏற்றவயது வந்தவுடனே அவனை ராஜ்யத்துக்கு அரசனாக்கிவிட்டு, தன் பத்தினியுடன் கௌசிகாசிரமம் என்கிற ஸ்தலத்திற்குச் சென்று வானப்பிரஸ்தாசிரமம் பூண்டு தவம்புரியலானான்.

ஜீமூதவாகனன் தாய்தந்தையருடைய முதுமைப்பருவத்தில் தான் அவர்களுக்குப் பணிவிடை செய்வதைவிட்டு அரசாட்சி செய்யப் புகுவது உசிதமல்லவெனத் தெரிந்து, சிறிது தினங்களுக்குள்ளேயே தன் ராஜ்யத்துக்குப் பகைவர்களால் அபாயம் யாதும் நேரிடாதவண்ணம் தகுந்த ஏற்பாடுசெய்து, சமர்த்தனான ஒரு நல்ல மந்திரியினிடம் அரசாட்சியை ஒப்புவித்துவிட்டுக் குடிகளால் நன்கு மதிக்கப்பெற்றவனாகவே விதூஷகனென்கிற தோழனுடன் தாய்தந்தையரிருப்பிடம் சென்று அவர்களுக்கு ஏற்றவாறு பணிவிடை செய்துகொண்டிருந்தான்.

அந்தத் தபோவனத்தில் தவசிகளுக்குவேண்டிய கனி காய் கிழங்கு முதலியனவும் வைதிகச்சடங்குகளுக்கு இன்றியமையாத ஸமித்து தர்ப்பை முதலியனவும் காலவளவிலே குறைவுபட்டுக் கிடைப்பது அருமையாய்ப் போகவே, ஜீமூதகேது அவ்விடத்தை விட்டு மலயபர்வதத்தில் வாஸஞ்செய்ய நினைத்து, அங்கே தகுந்த ஸந்நிவேசம் பார்த்துவரும்படி தன் குமாரனுக்குக் கட்டளையிட, அவனும் 'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்றபடி அக்கட்டளை

யைச் சிரமேற்கொண்டு உடனே தோழனுடன் புறப்பட்டு மலய பர்வதத்தை நோக்கிச்சென்ருன்.

போகும்போது வழியில், ஜீமூதவாகனனும் விதூஷகனும் அடியிற்கண்டவிதமாக ஸம்பாஷணை செய்துகொண்டேபோனர்கள்.

ஜீமூதவாகனன்: தோழனே, இவ்விளமைப்பருவமானது ஜனங்களுக்குப் பலவகை விருப்பங்களை விளைவித்து, இது நற்செயல் இது தீச்செயல் என்கிற பகுத்தறிவையும் மறைத்துத் தீயவழியில் நடப்பித்துக் கெடுப்பதாயிருக்கின்றது. அன்றியும் நீரிற்குமிழிபோலே விரைவில் மாறிவிடத்தக்கது. இவையெல்லாம் நானும் அறிந்தவையே; ஆயினும், இப்போதுபோல் மிகுந்த வாழ்நாளும் எனது மாதா பிதாக்களுக்குப் பணிவிடைசெய்வதற்கே பயன்படுவதானல் என் வரையில் இந்த இளமைப்பருவத்தை மேலானதாகவே கொண்டாட வேண்டும்.

விதூஷகன்: நண்பனே, நீ சொன்னபடி இளமை எப்படி நீடித்து நில்லாதோ, அப்படியே நிறைசெல்வமும் நீரிற்சுருட்டுநெடுந்திரைகள்போல நிலையில்லாததல்லவா? இந்த இளமைப்பருவத்தில் சுகமாய் ராஜ்யபரிபாலனம் செய்துகொண்டு இம்மையில் அனுபவிக்கத் தக்க பல சுகங்களையும் அனுபவித்து, முதுமைப்பருவத்தில் வனவாஸம் செய்யவேண்டியதல்லவோ முறைமை. உன் தந்தையும் அவ்வாறு வயதுமுதிர்ந்தபின்புதானே வானப்பிரஸ்தராய் வனவாஸத்திற்கு வந்தது. உன் இளமைப்பருவம் முழுதும் இந்தக் கிழங்களுடனே காட்டில் அலைந்து திரிந்துவிடுவாயானல் பின்பு எப்போதடா ராச்சியசுகத்தை நீ அனுபவிப்பது?

ஜீமூத. — நீ என்னவோ சொல்லுகிருய்; அது என் புத்திக்கு இதமாகத் தோற்றவில்லை. என் தகப்பனர்முன் தரையில் உட்காருவதில் எவ்வளவு ஆனந்தமுண்டாகிறதோ, அவ்வளவு ஆனந்தம் ஸிம்மாஸனத்தில் உட்காருவதால் உண்டாகிறதில்லை. என் பிதாவின் திருவடிகளைப் பிடிப்பதில் எவ்வளவு சுகமோ அவ்வளவு சுகம் என் கால்களை இதரராஜாக்கள் பிடிப்பதால் நேரிடுகிறதில்லை. என் தந்தை புசித்து மிகுந்த காய்கனிகள் எவ்வளவு உருசியாயிருக்கின்றனவோ அவ்வளவு ருசி ராஜபோஜனத்திலில்லை. மேலும் இராச்சியம் என்பது ஒரு பெருஞ்சுமை; அதில் என்னசுகமிருக்கிறது?

விதூ.—(ராஜகுமாரனது குருபக்தியைப்பற்றி மனதில் மகிழ்ந்துகொண்டு) தோழா, நீ சுகத்தை அனுபவிக்கவேண்டுமென்பதைப் பற்றிமாத்திரமே நான் சொல்லவில்லை; இன்னும் ராச்சியவிஷயத்தில் நீ செய்யவேண்டிய முக்கியமான காரியங்களும் பல இருக்கின்றனவே.

ஜீமூத.—எல்லாம் செய்தாயினவே; இன்னும் என்ன இருக்கின்றது? ஆனலும் நீ நினைத்திருப்பதைச் சொல், கேட்போம்.

விதூ.—மதங்கராஜன் மகா பலிஷ்டன், துணிச்சல் உள்ளவன்;

அவன் உனக்குப் பகையாளியாய் ஏற்ற சமயத்தை எதிர்பார்த்திருக்கிருன். ஆதலால், நீ ராச்சியபரிபாலனம் செய்யாமல் அதைமந்திரிகள்வசம் விட்டுவிட்டிருப்பது உசிதமாய்த் தோன்றவில்லை.

ஜீமூத. — ஆயின் மதங்கன் நமது ராஜ்யத்தை அபஹரித்துக் கொள்வானென்று நீ பயப்படுகிருய்?

விதூ.—ஆம்.

ஜீமூத.—(ஸந்தோஷத்துடன்) ஓகோ! அப்படியானல் அதிக ஸந்தோஷம். அயலாருக்கென்றே நான் சரீரம்முதலிய எல்லாவற்றையும் வைத்திருக்கிறேன். இராச்சியத்தை நானே மதங்கனுக்குக் கொடுத்துவிடுவேன்; தந்தை கோபஞ்செய்வார்; அதற்காகவே இதுவரையில் கொடாமலிருப்பது. அவனே அதைக் கைப்பற்றிக் கொள்வானுகில் எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை; வெகு சந்தோஷம், 'பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலவே' என்றுன்.

இருவரும் இவ்வாறு ஸம்பாஷணைசெய்துகொண்டே மலயபர்வதம்போய்ச் சேர்ந்தார்கள்.

குளிர்ந்து தென்றல்காற்றுவீசும் அழகையும், நாற்புறமும் சந்தனவிருக்ஷங்கள் தளிர்த்து இருக்கும் விநோதத்தையும், அம்மலையின் தாழ்வாரைகளில் தாரைதாரையாய் மலைஅருவிகள் பெருகும் அற்புதத்தையும் பார்த்துக்கொண்டே அவர்கள் இருவரும் மலயமலைமேலேறினர்கள். ஏறும்பொழுதே ஜீமூதவாகனனுக்கு வலதுகண் துடித்தது. அதுகண்டு அவன் இதெதற்காகத் துடிக்கிறது? நான் யாதொரு பலனையும் உத்தேசித்து இம்மலைக்கு வரவில்லையே என்று யோசித்துக்கொண்டே சென்றுன்.

வழியிலே மான்கள் அசையாமல் காதுகளை நெறித்துச்கொண்டு நின்றன. அதைக்கண்ட விதூஷகன், இந்தத் தபோவனத்தில் யாரோ கானஞ்செய்வதாய்த் தோன்றுகிறது. இந்த மான்கள் அதைக் கேட்டுக்கொண்டுதான் இவ்வாறு நிற்கின்றன. அன்றியும் அதோ வீணைகானம் காதுக்கு இனிப்பாய்க் கேட்கின்றதுபார்; பாடுங்குரல் பெண்குரலாயிருக்கிறது. இதோ இங்கே ஓர்தேவாலயம் தென்படுகின்றது; ஆலயங்தொழுவது சாலவுநன்றுகையால் நாம் அவ்விடம் சென்று ஸ்வாமியைத் தரிசித்துவருவோம் வா என்று சொல்ல, ஜீமூதவாகனன் அதற்கு உடன்படவே, இருவருமாய்த் தேவாலயத்தருகே சென்றுர்கள்.

அந்தத் தேவாலயத்தின்முன்னே ஒரு பெண் உட்காந்து பாடிக்கொண்டிருந்தாள். அவளைக் கண்டு பின்னிடைந்து ஜீமூதவாஹனன் நாம் அவள்முன்னே போகலாமோ கூடாதோ என்று ஐயமுற்று அருகேயிருந்த ஓர் செடியில் மறைந்து அவள் பாடுவதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அந்த ஆலயத்திலுள்ள தேவதை பார்வதிதேவி. அங்கே பாடுகின்றவள் வித்தாதரஜனுகிய விசுவாவசுவின் மகள்; அவள் பெயர்

மலயவதி. தனக்குத் தகுந்த புருஷன் கிடைக்கவேண்டுமென்று பிரதிதினமும் அவள் பார்வதியின் சன்னிதிக்குவந்து பாடிக்கொண்டிருக்கிறாள்.

அன்றையதினமும் வழக்கப்படி அவள் பார்வதிதேவியின் சன்னிதிக்கு வந்து,

"உத்ஃபுல்லகமலகேஸர பராககௌரத்யுதே மம ஹி கௌரி ।
அபிவாஞ்சிதம் ப்ரஸித்யது பகவதி யுஷ்மத்ப்ரஸாதேந ॥"

> தீராத வினைமுழுது மோராத கொலைகளவு தீயாக வெந்தொழியவே
> வாராத வழியுதவு மாமாயி தோகைமயில் வாராகி சூலி கௌரி
> ஓராத புல்லறிவி லீருரு போதனையை யோதாம லோத வருவாய்
> நாராய ணன்பிறவி யோடே பிறந்தசிவ னாக் கலந்த வமுதே.

என்கிற கவியைப்பாடி வெகுநேரம் ஆலாபித்துக்கொண்டிருந்தாள். மலயவதியுடன் கூடவந்திருந்த சதுரிகை என்னும் தோழி, நீவெகு நாழிகையாக வீணைவாசிக்கிறாயே, கைநோவவில்லையா என, மலயவதி, அடி பேதாய், கைநோவென்கிறாயே என்ன, தேவஸன்னிதானத்தில் எத்தனை நாழிகை வாசித்தாலும் எனக்குச் சிரமம் உண்டாக மாட்டாது போ என்றாள்.

அதுகேட்டுத் தோழி, ஆம், இதுவரையில் உன் சரீரம் தாளாத கொடிய விரதங்கள் எல்லாம் இருந்துகொண்டு பாடியும் கருணை கூராமல் கல்நெஞ்சினளாயிருக்கிற தேவியினிடத்தில் வீணே வீணை வாசித்தாவதென்ன என்றாள்.

அதற்கு மலயவதி, ஸகீ, சதுரிகாய், நீ தேவியைக் கருணையற்றவளென்று பழிக்காதே; நேற்றிராத்திரி கனவிலே தோன்றிக் கடாக்ஷித்து, வித்தியாதர சக்ரவர்த்தி உன்னை விரைவிலேவந்து விவாஹம் செய்துகொள்ளப் போகிறாரென்று தேவி அனுக்கிரகம்செய்தருளினாள் என்றாள்.

இதைக் கேட்டவுடனே விதூஷகன் ஜீமூதவாகனனுடன், நீயே இவளுக்கு பர்த்தாவாகும்படி பார்வதி அனுக்கிரகம் செய்தாளாம் என்றான்.

ஜீமூதவாகனன் மலயவதியைக் கண்டநிமிஷமுதல்,

> "அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
> மாதர்கொன் மாலுமென் னெஞ்சு"

என்றபடி, இவள் தெய்வப்பெண்ணோ, நாககன்னிகையோ, பிரமதேவன் அற்புதமாய்ப்படைத்த மடமயிலோ, குயிலோ, அல்லது மனிதர்குலத்தில் தோன்றிய பெண்மணியேயோ என்றிப்படிப் பலவாறாக யோசித்துக்கொண்டிருந்தான்.

தேவியைத் தரிசனம்செய்துவருவோம் வா என்று விதூஷகன் அப்பொழுது பலாத்காரமாய் ஜீமூதவாகனனை இழுத்துக்கொண்டு

போய் அப்பெண்களின் எதிரே நிறுத்தினன். எதிரேவந்து நின்ற வுடனே மலயவதி ஜீமூதவாகனனைக்கண்டு எழுந்திருந்து சற்று ஒதுங்கி நின்றுள்.

அப்பொழுது விதூஷகன் சதுரிகையைநோக்கி, பெண்ணே, உன் ஸகிக்குக் கணவனுகத் தேவிசொன்னவர் இவர்தாம் என்று குறித்துக்காட்டினன்.

அதைச் செவியுற்ற மலயவதி மிக்க மகிழ்ச்சிகொண்டாளாயினும் அதை வெளிக்காட்டாமல் நாணங்கலந்த அச்சத்துடனே வெளியேபோக ஆரம்பிக்க, விதூஷகன், ஓகோ, உங்கள் தபோவனத்து ஆசாரம் ஆச்சரியமாயிருக்கின்றதே; இதென்ன! அதிதிகளாய் யாராவது வந்தால் பூஜைசெய்யாவிட்டாலும், நல்வரவுகூட விசாரிப்பதில்லையோ என்றுன். சதுரிகை அதைக்கேட்டதும் மலயவதியை நோக்கி, தோழி, அந்தணர் உரைத்ததைக் கேட்டாயோ; இப்படி நீ ஓடிப்போகலாகாது; நம்மிடத்திற்கு அதிதிகளாகவந்த இவர்களை நீ ஆராதிக்கவேண்டுவது உனது கடைமை என, மலயவதி, ஜீமூதவாகனனை ஆசையுடன் பார்த்துக்கொண்டிருந்தாளேயல்லது தோழிக்கு யாதொரு மறுமொழியும் கூறவில்லை. கூறுமற்போகவே சதுரிகை, ஸகி, நீ அதிதிகளுக்கு உபசாரம்செய்ய மாட்டாய்போலும்; நான் யதோசிதமாய் உபசரிக்கிறேன் என்று சொல்லி, ஜீமூதவாஹனனிடம்வந்து அர்க்கியபாத்தியம் முதலிய உபசாரங்கள் செய்து பூஜித்தாள்.

இதற்குள் மத்தியான்னகாலமாயிற்று. அது மத்தியான்ன ஹோமம் செய்யவேண்டிய காலமாதலின் அப்பொழுது அதைத் தரிசிக்கவேண்டியதற்காக மலயவதியை அழைத்துவரும்படி கௌசிகமுனிவர் கட்டளையிட்டனுப்பிய சாண்டில்யமுனிவன் மலயவதியை ஆச்சிரமத்திற்கு வரும்படி அழைத்தான். மலயவதியானவள் ஜீமூதவாகனனை விட்டுப்பிரிய மனமில்லாதிருந்தும் வேறு விதியில்லாமல் சதுரிகையுடன்கூட அவனைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே ஆச்சிரமம்போய்ச் சேர்ந்தாள்.

ஜீமூதவாஹனன், அந்தத் தபோவனம் வெகு ரமணியமாயிருப்பதுகண்டு அதையே தன் தகப்பனுருக்கு ஆச்சிரமமாகக் கொள்ளலாமென நிச்சயித்துக்கொண்டு, அதை அவருக்குத் தெரிவிக்கும்படி விதூஷகனுடன் புறப்பட்டுக் கௌசிகாச்சிரமம்போய்ச்சேர்ந்து அந்தத் தபோவனத்தைப்பற்றித் தெரிவிக்க, ஜீமூதகேதுவும் தன் பத்தினியுடனே மலயபருவதம் சேர்ந்து அம்மலைமேல் ஓர் ஆச்சிரமம் அமைத்துக்கொண்டு அதிலே வாசம்செய்யலானுன்.

இவ்வாறிருக்க, ஜீமூதவாகனன் மலயவதியைக் கண்டநாள்முதல் அவள்மேல் ஆசைகொண்டவனுய், தாய்தந்தையர்களுக்குப் பணிவிடைசெய்யவேண்டியபொழுதுபோக மற்றக்காலங்களில் முன் தான் மலயவதியைப்பார்த்தவிடமான தேவி ஆலயத்திற்குச் சென்று

அங்கே அவளைப்பற்றி விதூஷகனுடன் பேசிப் பொழுது போக்கிக் கொண்டிருந்தான்.

மலயவதியும் ஜீமூதவாகனனைக் கண்டதுமுதல் அவனையே தனக்குக் கணவனுகக் கொள்ளவேண்டுமென்ற காதல்கொண்டவளாய் அதே சிந்தையாக நாளுக்குநாள் தாபம் அதிகமாகி, ஸகிகள்செய்யும் சீதோபசாரங்களால் ஒருவாறு காலங்கழித்துவந்தாள். ஒருநாள் விரகதாபம் அதிகமாகிவிட, தனது இளம் வாழைத்தோப்பிலுள்ள சந்தனமாளிகையில் பளிங்குமண்டபத்தில் சந்திரகாந்த மேடையிலே போய்ப்படுத்து, பலவிதமாய் ஸகிகள் உபசாரஞ் செய்ய அதுவும் பயன்படாமல் தபித்துக்கொண்டிருந்தாள்.

(இன்னும் வரும்.)

நாநாவிஷயக் குறிப்புகள்.

பர்மாதேசம்.

அங்கிலேய தேசத்துக்கு இப்போது உட்படுத்தப்பட்ட உத்தர பர்மாதேசமானது மன்னுயிர்களுக்குச் சௌக்கியமான தேசமாயிருப்பதினுலும், மாதம் மும்மாரி தவருமல் பெய்துகொண்டிருப்பதினுலும், நிலவளமும் நீர்வளமும் குறைவில்லாமல் பயிர்வளர்ச்சியுள்ளதாயிருப்பதினுலும், மற்றத் தேசங்களைப்பார்க்கினும் மிகவும் குடிவளமுள்ளவையான இந்தியா சீனு இத்தேசங்களுக்கு மத்தியிலிருப்பதுபற்றி அநேக வியாபாரங்களின் போக்குவரவுக்கு அனுகூலமான மார்க்கமாக உபயோகிக்கத்தக்கதாயிருப்பதனுலும், அநேக வருஷங்களாய் பிரிட்டிஷ்ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அந்நியதேசங்கள் பலவற்றினும் இந்த பர்மாதேசம் மிகவும் சிறந்ததாக இருக்கின்றது. அந்தப் பூமியில் நெல்முதலான தானியங்களும், பருத்தி பஞ்சு புகையிலை ஆமணக்கு இவைகளும் அதிகமாய் உண்டாகின்றன. அத்தேசத்துக் குடியானவர்கள் அறுபத்திரண்டு விதமான நெல்லுகள் பயிர்செய்கிருர்கள். அவைகளில் பல நமக்குத் தெரிந்தவைகளே; தெரியாதவைகளும் சிலவுண்டு. அவை பசையுள்ள தானியங்கள்; சுதேசிகள் அதிகமாய் அவைகளைச் சாப்பிட்டு வருகிருர்கள். அத்தேசம் பத்துவருஷகாலமாய் விருத்தியாகிவருகிறதென்பதற்கு அரசிறையும் குடிவளமும் அதிகமாகிக்கொண்டேவருதலே அறிகுறியாயிருக்கின்றது.

பூகோளவிசாரம்.

பூகோளசாஸ்திர விசாரம்பண்ணும் சங்கத்தில் சில தினங்களுக்கு முன்னே ஹாலெட் என்பவர் இந்தியா, சியாம், சீனு இத்தேசங்களை இருப்புப்பாதையால் பிணைப்பதற்குத் தான் செய்த விசாரணை

விஷயமாய்ப் பிரசங்கித்தபோது, சீனதேசம்வரையிலும் இருப்புப் பாதைபோட்டு அந்தச் செழிப்பான தேசத்தோடு பிரபலமான வியாபாரம்செய்வதற்கு ராஜ்யநீதியையடுத்த இடையூறு யாதொன்றுமில்லையெனவும், சுலபமாய் பிரமபுத்திராநதியின் பள்ளத்தாக்கையும் ஐராவதிநதியின் பள்ளத்தாக்கையும் இருப்புப்பாதையால் பிணைக்கலாமெனவும், அந்தப் பாதையை ரங்கூன்துறைமுகத்தில் முடிகிற இருப்புப்பாதையுடன் சேர்க்கலாமெனவும் தானே நேரில் போய்ப் பார்த்து அளவெடுத்துக் கூறினர். இப்பொழுது ரங்கூன் வரைக்கும் போடப்பட்டிருக்கிற இருப்புப்பாதை 162 மைல் தூரந்தான் உள்ளதென்றாலும் இதில் நல்ல லாபங்கிடைக்கிறது; ஐராவதி யாற்றின்வழியாய் நீராவி மரக்கலம் எப்பொழுதும் ஓடுகிறதாயினும் அதனல் இந்தப் பாதையில் கிடைக்கிற ஊதியத்திற்குக் குறைவில்லை.

புதுமாதிரிக்கடிதம்.

இதுவரையில் நாய்த்தோலைப்போல எழுதுவதற்கு அழுத்தமும் உரப்புமான வேறுபொருள் கிடையாது; இப்பொழுது உபயோகிக்கிற சாதாரணமான கடுதாசிக்கு மேற்படி குணங்கள் உண்டாவதற்காக ஒருயுக்தியான முறை கண்டுபிடித்துப் பிரசித்தம்பண்ணப்பட்டிருக்கிறது. இந்த யுக்தி ஐரோப்பாகண்டத்து மத்தியபாகங்களிலுள்ள சில புத்திமான்கள் கண்டுபிடித்தது. அந்த யுக்தி என்னவெனில், காகிதம் செய்வதற்காக ஏற்படுத்திய கந்தைத் துணிகள் சணல் இவைகளை நனைத்து ஊறவைத்து ஊறினபிறகு பிசைந்து உருண்டையாக்கி அந்த உருண்டையோடு குளோரைட் (Chloride) கலந்த துத்திநாகத்தைச் சேர்ப்பதாம். அப்படி ஒன்றாய்க் கலந்தபிறகு அந்தக் கலப்பு ஜலம்போலிராமல் எவ்வளவு உறுதியாயிருக்கிறதோ அவ்வளவு அதிலிருந்து உண்டாக்கப்பட்ட காகிதமும் உறுதியாயிருக்கும். இவ்வகையாய்ச் செய்யப்பட்ட உரப்பான காகிதம் பெட்டிகள் செய்வதற்கும், பாதரக்ஷைதைப்பதற்கும் தோலைப்போல் உபயோகிக்கப்பட்டதென்றும் தெரியவருகின்றது. இரண்டாவது சொல்லப்பட்டது மிக நூதனமன்று; ஏனெனில் சொற்பவிலைக்குவிற்கிற பாதரக்ஷைகளுக்குள் நடுவே முழுமையும் தோலை வைக்காமல் அநேகமாய் ஊதாவர்ணமான ஒருவகைக் காகிதத்தை வைப்பது வழக்கமே. இப்படி ஊதாகாகிதம் வைக்கிற சூது நாந்தல்நாளில் செருப்பைப் போட்டுக்கொள்கிறவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

வெடிபாண மரக்கலம்.

"யாரோ அண்டு கம்பேனி" என்னும் சங்கத்தார் ஆஸ்திரியன் துரைத்தனத்தாருக்கு, இப்போது இருக்கும் புகைமரக்கலம், சண்டைக்கப்பல் இவைகளைப்பார்க்கிலும் அதிவேகமாய் ஓடத்தக்க